**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 314/2025**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | தமிழ்மணி ( LW.1 ) |
| Father's / Husband Name | : | த/பெ.முத்துசாமி |
| Village | : | அல்லாலபுரம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | |
| Age | : | 72 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை விசாரணை:-**

1) நான் தற்போது அல்லாரபுரம், திருச்செங்கோட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு அடையாளம் தெரியவில்லை. கடந்த 15.12.2024 ம் தேதி மாலை 07.30 மணியளவில் நானும், செல்வராஜீம் அவருடைய இரண்டு சக்கர வாகனத்தில் அல்லாலபுரத்தில் இருந்து வேலக்கவுண்டம்பட்டி செல்வதற்காக சென்று கொண்டிருந்தபோது நாச்சியம்மாள் மளிகை கடை அருகே வந்தபோது எதிரே வந்த டெம்போ வாகனம் எங்கள் இ ருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்தை ஏற்படுத்திய வாகனம் மோதியதில் வலது பக்கத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது, செல்வராஜ்க்கு தலையில் பலத்த அடிப்பட்டதில் அவர் மயங்கி விழுந்துவிட்டார். அருகில் இருந்தவர்கள் எங்களை சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலமாக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். செல்வராஜ்- ஐ பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியில் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். நான் அரசு மருத்துவமனையில் ஒரு நாள் சிகிக்சை பெற்று மேல் சிகிச்சைகக்காக தனியார் மருத்துவமனை சென்று விட்டேன்.இந்த விபத்து குறித்து வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் நான் தான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகி**றது. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் நடத்திய பிரேத

விசாணையின் போது உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். செல்வராஜ் உடைய மரணம் இந்த விபத்தால் தான் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் போது ஒருபுறமாக தான் அமர்திருந்தேன் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் தலைக்கவசம் அணிந்து பயணம் செய்யவில்லை என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்த கொண்டதை தவிர மற்ற எந்த மருத்துவமனையிலும் மேல் சிகிச்சை எடுத்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் ஒருபக்கமாக அமர்ந்து சென்றதால் யாருடைய கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் குறித்த விவரங்கள் எதையும் சொல்லவில்லை என்றால் நான் பார்க்கவில்லை, அதனால் சொல்லவில்லை. இந்த விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். வேறுஒரு நபர் எழுதிய புகாரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 314/2025**

**PW - 2**

| | | |
|---|---|---|
| Name | : | சாந்தி ( LW. 2 ) |
| Father's / Husband Name | : | க/பெ.செல்வராஜ் |
| Village | : | அல்லாலபுரம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை விசாரணை:–**

1) நான் தற்போது அல்லாரபுரம், திருச்செங்கோட்டில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன செல்வராஜ் எனது கணவர். கடந்த 15.12.2024 ம் தேதி மாலை 07.30 மணியளவில் எனது கணவரும், அவருடைய நண்பர் தமிழ்மணியும் வெளியே செல்வதாக கூறிவிட்டு எனது கணவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். அப்பொழுது வேலக்கவுண்டம்பட்டி பிரிவு அருகில் சென்றபோது டெம்போ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு அலைபேசி மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் கேள்விப்பட்டு நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். நான் வந்து பார்க்கும் போது எனது கணவர் இறந்த நிலையில் இருந்தார். இந்த விபத்து குறித்து தமிழ்மணி தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். அதில் நான் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். எனது கணவருடைய மரணம் இந்த விபத்தால் தான் ஏற்பட்டது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் மற்ற நபர்கள் சொன்னதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.314/2025**

**PW - 3**

| | | |
|---|---|---|
| Name | : | இளம்பரிதி ( LW. 3 ) |
| Father's / Husband Name | : | த/பெ.செல்வராஜ் |
| Village | : | அல்லாலபுரம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | வணிகவரிதுறை |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை விசாரணை:–**

1) நான் தற்போது அல்லாரபுரம், திருச்செங்கோட்டில் குடியிருந்து வணிகவரி துறையில் பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன செல்வராஜ் எனது தந்தை. கடந்த 15.12.2024 ம் தேதி மாலை 07.30 மணியளவில் எனது தந்தையும், அவருடைய நண்பர் தமிழ்மணியும் வெளியே செல்வதாக கூறிவிட்டு எனது தந்தை அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். அப்பொழுது வேலக்கவுண்டம்பட்டி பிரிவு அருகில் சென்றபோது டெம்போ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு அலைபேசி மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் கேள்விப்பட்டு நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். நான் வந்து பார்க்கும் போது எனது தந்தை இறந்த நிலையில் இருந்தார். இந்த விபத்து குறித்து தமிழ்மணி தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் பேரில் போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். அதில் நான் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். எனது தந்தையின் மரணம் இந்த விபத்தால் தான் ஏற்பட்டது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் மற்ற நபர்கள் சொன்னதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 314/2025**

**PW - 4**

| | | |
|---|---|---|
| Name | : | திவாகர் ( LW. 7 ) |
| Father's / Husband Name | : | த/பெ. பூபதி |
| Village | : | வேலக்கவுண்டம்பட்டி |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | கான்ட்ராக்டர் |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை விசாரணை:-**

1) நான் தற்போது வேலக்கவுண்டம்பட்டியில் குடியிருந்து அரசு ஒப்பந்த பணியாளராக தொழில் செய்து வருகிறேன். கடந்த 16.12.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் புத்தூர் பிரிவு ரோட்டில் உள்ள நாச்சியம்மாள் மளிகை கடை அருகில் எனது சொந்த பணி நிமித்தமாக இருந்தபோது 15.12.2024-ம் தேதி அன்று நடந்த சாலை விபத்து சம்மந்தமாக வேலக்கவுண்டம்பட்டி போலிசார் வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தனர். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் அருண்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். போலிசார் என்னை சம்பவயிடத்தில் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

2) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்ததது என்று எனக்கு தெரியாது என்றால் சரி.

**மறு விசாரணை - இல்லை.**